மருந்து உட்கொண்டுவரும்போது, கடுமையான சூரிய வெப்பத்தில் வெளியில் செல்லாதீர்கள். வெளியில் செல்ல நேரிட்டால், சூரியக்கதிர்த் தடுப்பு களிம்பு (sunscreen) பயன்படுத்துங்கள்.

மருந்து உட்கொண்ட பிறகு, கீழ்க்காணும் அறிகுறிகள் தோன்றினால் உடனே மருத்துவரைப் பாருங்கள்:

- கடுங் காய்ச்சல், அதிகமான வியர்வையுடன் தசை இறுக்கம்; அல்லது
- முறையற்ற இருதயத் துடிப்பு; அல்லது
- வலிப்பு

## மருந்தை நான் எப்படி **வைத்திருக்க** வேண்டும்?

மருந்தை, அது முதலில் இருந்த டப்பாவிலேயே போட்டு, குளிர்ச்சியான, உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். ஈரம், வெப்பம், நேரடி சூரியஒளி படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Ministry of Health

National Healthcare Group

SingHealth



# நோயாளி தகவல் கையேடு

# மனநோய் சிகிச்சைக்கான மருந்துகள்

குளோர்ப்ரோமசைன் • ஃபுளுபென்திக்சால் • பிமோசைட் • சல்பிரைட் • ஹாலோபெரிடால் • ட்ரைஃபுளுவொபெரசைன்

## Medicine To Treat Mental Disorders

Chlorpromazine • Flupenthixol • Pimozide • Sulpiride • Haloperidol • Trifluoperazine

T35R0

## உங்கள் மருந்து பற்றிய தகவல்

மனநோயின் அறிகுறிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருந்து ஒன்றை மருத்துவர் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் மருந்துகளில் சில, மனநோய் தவிர, மற்ற பிரச்னைகளுக்கும் பயன்படும். (எ.கா. குளோர்ப்ரோமசைன் கடுமையான குமட்டல் & வாந்தியைக் கட்டுப்படுத்தவும், ஹாலோபெரிடால் விக்கலைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றன).

இந்த மருந்து, குறிப்பிட்ட சில நரம்பு டிரான்ஸ்மிட்டர்கள் (neurotransmitters) மூளைக்குள் பரவுவதைக் குறைக்கிறது. அதன்மூலம், சிந்தனைக் கோளாறு, பிரமை பிடித்தல், மருட்சி (delusion), உணர்ச்சிகளை சரிவர வெளிப்படுத்த முடியாமை, சக்தியின்மை போன்ற மனநோய் அறிகுறிகளை அமைதிப்படுத்தி, அவற்றைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

## மருந்தை நான் எப்படி உட்கொள்ள வேண்டும்?

நீங்கள் எவ்வளவு மருந்தை எத்தனை முறை உட்கொள்ள வேண்டும் என்பதை மருத்துவர் எடுத்துரைப்பார். எது உங்களுக்கு மிகப் பொருத்தமானது என்பதைக் கண்டறிய, ஆரம்பத்தில் மருந்தின் அளவு பலமுறை மாற்றப்படலாம். மருத்துவர் கூறும் அளவுக்குக் கூடுதலாகவோ, அல்லது அவர் கூறிய வேளைகளுக்கு அதிகமாகவோ மருந்து உட்கொள்ளாதீர்கள்.

மருந்தை தினமும் ஒரே நேரத்தில் உட்கொள்ளுங்கள். வயிறு பாதிக்காமலிருக்க, மருந்தை உணவுடன் எடுத்துக் கொள்ளுங்கள். மருத்துவரைக் கேட்காமல் மருந்தை திடீரென்று நீங்களாகவே நிறுத்தாதீர்கள்.

## மருந்து உட்கொள்ள நான் மறந்துவிட்டால் என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.



நோயாளி தகவல் கையேடு | **மனநோய் சிகிச்சைக்கான மருந்துகள்**

## இம்மருந்து ஏற்படுத்தக்கூடிய பக்க- விளைவுகள் யாவை?

**1. கட்டுப்படாத தசை இயக்கங்கள்**

இந்த மருந்து, தசை திடீரென சுருங்குதல் (muscle spasms), உடல் நடுக்கம், முகம் மற்றும் உடல் வலிப்பு, நாக்கு, முகம் மற்றும் முகவாய்க்கட்டை கட்டுக்கடங்காமல் இயங்குதல் போன்ற பக்க-விளைவுகளை ஏற்படுத்தலாம். இவற்றைக் கட்டுப்படுத்த மருத்துவர் பென்செக்சால் (benzhexol) என்ற மருந்தைக் கொடுக்கலாம். இந்த அறிகுறிகளில் ஏதாவது இருந்தால் மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

**2. மந்தம் & தலைச்சுற்றல்**

இந்த மருந்து மந்த நிலையையும் தலைச்சுற்றலையும் ஏற்படுத்தலாம். வாகனம் ஓட்டும்போது அல்லது இயந்திரம் இயக்கும்போது கவனமாக இருங்கள். மது அருந்தாதீர்கள்.

**3. மற்ற பக்க-விளைவுகள்**

இந்த மருந்து, மங்கிய பார்வை, மலச்சிக்கல், வாய் உலர்தல், மார்பகங்களில் வலி அல்லது வீக்கம் போன்ற மற்ற பக்க-விளைவுகளையும் ஏற்படுத்தலாம். இவை பிரச்னையாக இருந்தால் மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## நான் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் யாவை

இந்த மருந்தை ஆரம்பிப்பதற்கு முன்னால், பின்வருவனவற்றை மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- இந்த மருந்து, அல்லது வேறு ஏதாவது மருந்து, உங்களுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும்.
- தற்சமயம் நீங்கள் மற்ற மருந்துகள் உட்கொண்டு வருகிறீர்கள்.
- உங்களுக்கு மருத்துவப் பிரச்னை இருக்கிறது. இரத்த அழுத்தப் பிரச்னைகள், இருதயக் கோளாறுகள் (குறிப்பாக முறையற்ற இருதயத் துடிப்பு) பார்க்கின்சன் நோய், எலும்புமஜ்ஜை கோளாறு, சிறுநீர் கழிப்பதில் சிரமம் அல்லது சுக்கியன் (prostate) சுரப்பி வீங்கியிருத்தல், கண்களில் மிகை அழுத்தம் (glaucoma), மார்பகப் புற்றுநோய், வலிப்பு நோய் மற்றும் சிறுநீரக அல்லது கல்லீரல் பிரச்னை போன்றவை.
- நீங்கள் தற்போது கர்ப்பமாக இருக்கிறீர்கள் அல்லது கர்ப்பம் தரிக்க திட்டமிடுகிறீர்கள் அல்லது தாய்ப்பால் கொடுக்கிறீர்கள்.